# தலைநகரில் 2 கடைகள் மூடல்

## 7 சம்மன்கள் சார்வு

கோலாலம்பூர், ஜூன் 15- விபச்சார நடவடிக்கையில் ஈடுபட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் தலைநகரில் 2 கடைகளை மூடியுள்ள வேளையில், 7 சம்மன்களையும் சார்வு செய்தது.

நேற்று முன்தினம் இரவு செபூத்தே நாடாளுமன்றத் தொகுதியில் உடம்புப்பிடி நிலையங்களில் மேற் கொள்ளப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கை யின்போது இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கோலாலம்பூர் மாநகர் மன்றத் தின் அமலாக்கப் பிரிவு இச் சோதனையை மேற்கொண்டதாக அது நேற்று தனது ஃபேஸ் புக்கில் கூறியது. பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட் டதாக அக்கடைகளுக்கு இந்த 7 சம்மன்கள் சார்வு செய்யப்பட் டன.1 974ஆம் ஆண்டு சாலை, கால்வாய், கட்டடச் சட்டத்தின் 79(1) பிரிவு, 2016ஆம் ஆண்டு வர்த்தக,



தொழில்துறை லைசென்ஸ் சிறிய குற்றங்கள் சட்டத்தின் யுயுகே3(1),யுயுகே20(1)(பி) பிரிவு, 1982ஆம் ஆண்டு யுயுகே விளம்பரப் பிரிவுகளின் கீழ் அந்த சம்மன்கள் சார்வு செய்யப்பட்டன.

அதேவேளையில், வர்த்தக லைசென்ஸ் இல்லாத இரண்டு கடைகள் 1976ஆம் ஆண்டு ஊராட்சித்துறை சட்டத்தின் 101(1)(தி) பிரிவின் கீழ் மூடப்பட்டதாகவும் அது கூறியது.

அக்கடைகளிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் அனைத்தும் செராஸ், ஜாலான் லொம்போங்கிலுள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றத் தின் கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.